# இலங்கைப் பத்திரிகைப் பேரவை

## ஆண்டு அறிக்கையும் கணக்குகள் அறிக்கையும்

*2015, சனவரி 01 முதல் 2015, திசெம்பர் 31 வரை*

இலங்கைப் பத்திரிகைப் பேரவை,
155/15, காசல் வீதி,
கொழும்பு 08,

கௌரவ மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சர்,
மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சு,
163, கிருலபன மாவத்தை,
பொல்ஹேன்கொட,
கொழும்பு 05.

கௌரவ அமைச்சர் அவர்களே,

**ஆண்டறிக்கை - 2015**

1973 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க இலங்கைப் பத்திரிகைப் பேரவைச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் நியதிக்கு இணங்க இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் கீழ் குறிப்பிடப்பட்ட அறிக்கையை இத்துடன் இணைத்து அனுப்புகின்றேன்;

1. 2014 சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதிக்குரிய பேரவையின் மீதான அறிக்கையும் பேரவையின் கொள்கை நிகழ்ச்சித்திட்டமும் ;
2. இக்காலப் பகுதிக்குரிய கணக்குகள் கூற்றின் பிரதி ஒன்று ;
3. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

தங்கள் உண்மையுள்ள,
(சனாதிபதி சட்டத்தரணி) கொக்கல வெல்லால பந்துல,
தலைவர்.

## இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் 2015 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை

இலங்கைப் பத்திரிகைப் பேரவை

1973 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க சட்டத்தினால் அமைக்கப்பட்ட இலங்கைப் பத்திரிகைப் பேரவை, மக்கள் தொடர்பாடல் மற்றும் தகவல் அமைச்சின் கீழ் இயங்கும் நியதிச் சபையாகும்.

இலங்கைப் பத்திரிகைப் பேரவையை அமைத்ததன் நோக்கம்:-

(1) இலங்கைப் பத்திரிகை சுதந்திரத்தை பாதுகாத்தல்;

(2) அச் சுதந்திரத்தை தவறாக பயன்படுத்துவதை தவிர்த்தல்;

(3) உண்மையான தகவல்களை பொதுமக்கள் அறிந்து கொள்வதற்கான உரிமையை பயன்படுத்துதல்.

2012.01.01 ஆந் திகதி தொடக்கம் இல. 155/15, காசல் வீதி, பொரளை, கொழும்பு 08 என்னும் இடத்தில் அமைந்துள்ளது.

### 1. பேரவையின் அமைப்பு:

நீதிமன்றத்தின் பகுதியாக அலுவல்களை மேற்கொள்ளும் இலங்கைப் பத்திரிகை பேரவையானது ஏழு (07) உறுப்பினர்களைக் கொண்டதாகும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியினால் உறுப்பினர்கள் ஆறுபேர் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அரசாங்க தகவல் பணிப்பாளர் உத்தியோகப்பூர்வமாக (தற்போதைய தகவல் பணிப்பாளர்) நியமிக்கப்படுவார். ஒருவர் புதினப் பத்திரிகைத்துறையின் பிரதிநிதியாகவும் இருத்தல், மற்றும் ஒருவர் தொழிலிலீடுபட்டுள்ள பத்திரிகை எழுத்தாளரின் பிரதிநிதியாக இருத்தல் வேண்டும். உறுப்பினர்களின் உத்தியோகபூர்வ காலம் 03 ஆண்டுகளாகும்.

அதிமேதகு சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பெயர்கள் கீழே குறிப்பிடப்படுள்ளது:-

| பதவி | பெயர் | நியமிக்கப்பட்ட திகதி |
|---|---|---|
| தவிசாளர் | திரு. கொக்கல வெள்ளால பந்துல சட்டத்தரணி | 2015.06.14 |
| உறுப்பினர் | டாக்டர் தர்ஷனி குணதிலக்க | 2015.06.14 |
| உறுப்பினர் | பேராசிரியர் சுனந்த மகேந்திர | 2015.06.14 |
| உறுப்பினர் | பேராசிரியர் ரோகன லக்ஷ்மன் பியதாச | 2015.06.14 |
| உறுப்பினர் | திரு. ஆரியரத்ன தொபகாவத்த | 2015.06.14 |
| உறுப்பினர் | திரு. காமினி சுமனசேகர | 2015.06.14 |

உறுப்பினரான திரு. பிரதீப் விஜேசுந்தர அவர்களின் உத்தியோக பூர்வகாலம் 2014.09.05 ஆந் திகதி அன்று முடிவடைந்ததுடன் உறுப்பினராக திரு. எஸ். தில்லைநாதன் அவர்கள் 2014.10.21 ஆந் திகதியன்று நியமிக்கப்பட்டார்.

### 2. பேரவையின் கூட்டங்கள்:

2015ஆம் ஆண்டில் 11 கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

### 3. முறைப்பாடுகள்:

2013, 2014, 2015 ஆம் ஆண்டு புதினப்பத்திரிகைகளுக்கு எதிராக முறையே 07, 27 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன.

| | | |
|---|---|---|
| 2013 ஆம் ஆண்டில் முன்கொண்டுவரப்பட்ட முறைப்பாடுகள் | - | 07 |
| 2014 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் | - | 27 |
| 2015 ஆம் ஆண்டில் விசாரிக்கப்பட்ட முறைப்பாடுகள் | - | 18 |
| 2015 ஆம் ஆண்டில் விசாரிக்கப்பட்ட முழுத்தொகை | - | 52 |

முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற மூலகங்கள் பின்வருமாறு:-

1. தனிநபர்கள்
2. நிறுவனங்களின் தலைவர்கள்/அமைச்சின் செயலாளர்கள்
3. பேராசிரியர்கள்
4. வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள்
5. குருமார்கள்
6. ஆசிரியர்கள், ஆசிரியைகள்
7. தொழிற் சங்கங்கள்
8. பலதரப்பட்ட அரசியல் கட்சித் தலைவர்கள்

2015 இல் கிடைக்கப்பெற்ற 52 முறைப்பாடுகளும் பின்வரும் உரிமையாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டதாகும்:

உரிமையாளர்களின் பெயர்

1. அசோசியேட்டட் நியுஸ் பேப்பஸ்
2. உபாலி நியுஸ் பேப்பஸ் லிமிட்டெட்
3. "லங்கா" மலட் பப்லிகேஷன்
4. வரையறுக்கப்பட்ட விஜய பத்திரிகை நிறுவனம்
5. சுமதி பத்திரிகை நிறுவனம்
6. ரிவிர பத்திரிகை நிறுவனம்
7. ராவய வெளியீட்டு நிறுவனம்
8. "ஈதலய" பத்திரிகை நிறுவனம்
9. லீடர் பப்லிகேஷன்
10. சிலோன் நியுஸ்பேப்பஸ் பிறைவட் லிமிட்டெட்

மீளாய்வின் கீழாண்டில் முறைப்பாடுகள் தொடர்பில் பேரவையின் தீர்மானம் கீழே தரப்பட்டுள்ளது:

| | |
|---|---|
| ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவை | - 23 |
| இணங்கப்பட்டவை | - 04 |
| மேலும் நடவடிக்கை அவசியமற்றவை | - 16 |
| தள்ளுபடி செய்யப்பட்டவை | - 09 |
| கட்டளையிடப்பட்டவை | - - |
| | 52 |

"மேலும் நடவடிக்கை அவசியமற்றவை" கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:-

* முறைப்பாடானது பத்திரிகைப் பேரவையின் சட்டத்திற்கு ஏற்றதல்ல;
* முறைப்பாட்டாளர்கள் தகுந்த நேரத்திற்கு பத்திரங்களை சமர்ப்பிக்கவில்லை;
* முறைப்பாடு விசாரணையின் போது முறைப்பாட்டாளர் சமுகமளிக்காமை;
* முறைப்பாடு தொடர்பிலான பத்திரிகை அப்போது பிரசுரிக்கப்படவில்லை;
* தொடர்பிலான பத்திரிகை அறிக்கை முறைப்பாட்டாளருக்கு தீங்கற்றது;
* முறைப்பாடு தொடர்பிலான வழக்கு மன்றத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

பத்திரிகை பதிவு செய்தல் :-

2015 ஆம் ஆண்டில் பேரவையில் பதிவு செய்யப்பட்ட புதினப் பத்திரிகைகளின் எண்ணிக்கை 223 ஆகும்.

**4. ஆளணியினர்**

தேசிய சம்பள மற்றும் ஆளணி ஆணைக்குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்தி புதிய படிவத்திற்கு அமைய ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

பத்திரிகைப் பேரவையின் தற்போதைய சேவையாளர்களின் எண்ணிக்கை 10 ஆகும்.

பத்திரிகைப் பேரவையில் கணக்காளராக பதவி வகித்த திரு. எஸ். ஏ. ஜகத்சிறி 31.10.2015 ஆந் திகதி அன்று ஓய்வுபெற்றதுடன் திரு. எச். ஏ. டீ. விஜேரத்ன 06.05.2015 ஆந் திகதி அன்று ஓய்வு பெற்றார்.

5. மக்கள் தொடர்பாடல் மற்றும் தகவல் அமைச்சினால் எந்தவித பணிப்புக்களும் வழங்கப்படவில்லை.

6. ஊடகவியலாளர்களை அறிவூட்டும் வேலைத்திட்டங்கள்

| திகதி | பட்டறை | பங்குபற்றிய ஊடகவியலாளர்கள் / பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை | இடம் |
|---|---|---|---|
| 05.09.2015 | மாத்தளை மாவட்டம் மாகாண கருத்தரங்கு | 57 | "Hotel Spring View" குளியாப்பிட்டிய |
| 16.09.2015 | ஊடகங்கள் தொடர்பில் விதிமுறைகள் அவசியமா என்னும் மாதாந்த கருத்தரங்கு வேலைத்திட்டம் | 343 | அரச தகவல் திணைக்களம் |
| 21.10.2015 | பொலன்நறுவை பாடசாலை கருத்தரங்கு | 345 | பொ/விலயாய மகா வித்தியாலயம் |
| 22.10.2015 | பொலன்நறுவை பாடசாலை கருத்தரங்கு | 402 | பொ/ராஜகீய வித்தியாலயம் |
| 06.12.2015 | மாகாண கருத்தரங்கு இரத்தினபுரி மாவட்டம் | 78 | "Hotel Cen Tauria" |

<u>பத்திரிகைத் துறை மற்றும் தொடர்பாடல் கல்வி தொடர்பிலான டிப்ளோமா பாடநெறி - 2015 ஆம் ஆண்டு</u>

ஊடகவியலாளர்கள் 38 பேரின் பங்களிப்புடன் அவர்களின் விடயம் தொடர்பிலான அறிவை மேம்படுத்தும் நோக்கில் பத்திரிகைத் துறை மற்றும் தொடர்பாடல் கல்வி தொடர்பிலான டிப்ளோமா பாடநெறியின் நான்காவது பகுதி 02.12.2015 இல் ஆரம்பிக்கப்பட்டது.

<u>வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் தொடர்பாடல் கலந்துரையாடல் - 2015</u>

தற்காலத்திற்கு அவசியமான வெளியீடுகளை இலக்காகக் கொண்டு தொடர்பாடல் தொடர்பிலான கலந்துரையாடல் வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது.

7. நிதி

(i) 2015 ஆம் ஆண்டிற்காக இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் மீண்டுவரும் செலவாக 25,000,000 ரூபாவை மக்கள் தொடர்பாடல் மற்றும் தகவல் அமைச்சினால் வருடாந்த செலவீடாக கிடைக்கப்பெற்றது. இத்தொகை திறைசேரியிலிருந்து மாதாந்த தவணையில் ஒதுக்கப்பட்டது.

(ii) 2015 ஆம் ஆண்டின் மூலதன செலவாக ரூபா 1,000,000 தொகை அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் இந் நிதியில் ரூபா 1,000,000 பேரவையின் செலவிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

(iii) 2015 ஆம் நிதி ஆண்டில் அரசாங்க கொடைகளும் பத்திரிகைப் பதிவுக் கட்டணத்திற்குப் புறம்பாக ஏனைய கொள்ளல்கள் பேரவையின் நிதியில் வைப்பில் இடம்பெற்றவற்றின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| | ரூபா சதம் |
|---|---|
| மீளப்பெறும் வைப்புக்களும் ஏனைய அறவீடுகளும் | 410,742.10 |
| பிந்திய பதிவுக் கட்டண வருமானம் | 42,200.00 |
| | 452,942.10 |

(iv) நிதி செயற்பாட்டு அறிக்கை:

மீண்டுவரும் செலவாக அரச மானியம் உட்பட வருடத்தின் முழு வருமானம் 18,437,942.10 ரூபாவாக இருந்ததுடன் 19,229,783.83 ரூபா செலவாக இருந்தது. வருமானத்திலும் மேலதிக செலவு 791,841.73 ரூபா வரவிலிடப்பட்டது.

(v) பேரவையின் திரட்டிய நிதி :

2015 ஆம் ஆண்டு பேரவையின் நிதியில் 3,837,09.36 ரூபா வரவிலிடப்பட்டது. வருட ஆரம்பத்தில் மூலதன தொகை .................. ரூபா ஆகும். வருடத்தின் நிலையான சொத்து மீள்பெறுமதியிடப்பட்டபோது மிகையாக ரூபா 2,849,514.00 ஆகும். உடன் மூலதன தொகையில் ரூபா 1,000,000 வரவிலிடப்பட்டது. வருடத்தில் வருமானத்திலும் மேலதிக செலவு ரூபா 136,843.00 முன்னைய ஆண்டில் செம்மைப்படுத்தப்பட்ட ரூபா 3,712,671 பேரவையின் நிதிக்கு மாற்றப்பட்ட பின்னர் வருட இறுதியில் ரூபா 125,972.10 வரவிலிடப்பட்டது.

பேரவையின் நிதியில் உபகாரத் தொகையாக 3,939,031.00 ரூபா செம்மைப்படுத்தப்பட்ட 286,459,17 ரூபா உட்பட நிலையான வருமானம் 849,194.47 ரூபாவும் உபகாரத்தொகை ஆய்வு ஆகியன வேறாக 3,945,342.52 ரூபா நிலையான சொத்து 2,752,587.71 வரவிலிடப்பட்ட ஏனைய வைப்புக்களாக எடுக்கப்படும்.

(vi) பத்திரிகை பதிவு செய்தல்:

2015 சனவரி தொடக்கம் திசெம்பர் வரையும் பத்திரிகைப் பதிவுக் கட்டணம் 575,000 ரூபா கிடைக்கப்பெற்றது.

**8. நன்றி நவிலல்:**

மக்கள் தொடர்பாடல் மற்றும் தகவல் அமைச்சினால் கிடைக்கப்பெற்ற சரியான அறிவுறுத்தல்களையும் வழிகாட்டல்களையும் வேலைத்திட்டங்களையும் வெற்றிகரமாக நடாத்துவதற்கு இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் ஊழியர் குழாத்தின் கூட்டு ஒத்துழைப்பையும் பெற முடிந்ததையிட்டு நான் இன்புறுகிறேன்.

கொக்கல வெல்லால பந்துல, (சட்டத்தரணி),
தலைவர்.

இலங்கைப் பத்திரிகைப் பேரவை,
155/15, காசல் வீதி,
பொரளை,
கொழும்பு 08,
2015, பெப்புருவரி 28.

இலங்கைப் பத்திரிகைப் பேரவை
நிதிச் செயற்பாட்டின் விபரம்
*2015 திசெம்பர் 31ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்காக*

*(எல்லா தொகையும் இலங்கை ரூபாவில் உள்ளது)*

| வருமானம் | குறிப்பு | 2015<br>ரூ. சதம் | 2014<br>ரூ. சதம் |
|---|---|---|---|
| இலங்கை அரசின் பங்களிப்பு | 3 | 17,410,000.00 | 18,270,000.00 |
| புத்தக விற்பனைக் கமிஷன் | | - | - |
| பத்திரிகை பதிவுக் கட்டணங்கள் | | 575,000.00 | 597,500.00 |
| பிரதி பண்ணற் கட்டணம் | | 6,640.00 | 6,825.00 |
| பிந்திய கட்டணம் | | 42,200.00 | 121,300.00 |
| புத்தக விற்பனை | 4 | 92.77 | (109.66) |
| டிப்ளோமா பாடநெறி வருமானம் | | 227,000.00 | 353,000.00 |
| உத்தியோகத்தரின் கடன் வட்டி வரவு | | 45,243.55 | 57,359.17 |
| சேமிப்புக் கணக்கின் வட்டி | | 131,765.78 | 94,613.14 |
| மொத்த வருமானம் | | 18,437,942.10 | 19,500,487.65 |
| செலவுகள் | | | |
| வேதனம், கூலி உத்தியோகத்தர் சலுகைகள் | 5 | 10,496,159.46 | 9,106,096.84 |
| விநியோகம் மற்றும் நுகர்வோர் பாவனை | 6 | 678,622.96 | 1,035,844.39 |
| சொத்து தேய்மானம் மற்றும் உபகரணம் | | 1,430,183.27 | 1,427,923.77 |
| செலவு பயன்பாடு | 7 | 3,141,219.51 | 3,160,808.22 |
| ஏனைய செலவுகள் | 8 | 1,940,047.48 | 2,114,834.66 |
| மானியம் மற்றும் மாற்று கொடுப்பனவு | 9 | 1,543,551.15 | 4,145,946.67 |
| மொத்த வருமானம் | | 19,229,783.83 | 20,991,454.55 |
| மிகை/(பற்றாக்குறை) வரிக்கு முன்னர் | | (791,841.73) | (1,490,966.90) |
| வருமான வரி செலவு | | - | - |
| வருடத்திற்கான மிகை/பற்றாக்குறை | | (791,841.73) | (1,490,966.90) |

இலங்கைப் பத்திரிகைப் பேரவை

*நிதி நிலைமை விபரம்*

*2015 திசெம்பர் 31ஆந் திகதியன்று*

| சொத்துக்கள் | குறிப்பு | 2015<br>ரூ. சதம் | 2014<br>ரூ. சதம் |
|---|---|---|---|
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| நிதி மற்றும் நிதி சமநிலை | 10 | 539,890.15 | 651,864.64 |
| பெறப்பட்ட வருமானம் | 11 | 13,370.00 | 23,962.71 |
| இறுதி இருப்புக்கள் | 12 | 529,865.01 | 552,229.77 |
| உற்சவ முற்பணக்கொடுப்பனவு | | 7,500.00 | 12,000.00 |
| அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் கொள்வனவு முற்கொடுப்பனவு | | - | 10,000.00 |
| வைப்புக்களும் முற்கொடுப்பனவும் | 13 | 767,130.05 | 696,121.73 |
| கிடைக்கப்பெற்ற இடருதவிக் கடன் | 14 | 894,832.50 | 1,251,206.00 |
| | | 2,752,587.71 | 3,197,384.85 |
| **நடைமுறை சொத்து அல்லாத** | 15 | 8,491,944.47 | 8,999,117.98 |
| சொத்து உபகரணம் | 16 | 3,945,342.52 | 3,139,173.89 |
| முதலீடு சேமிப்புக் கணக்கு | | **12,437,286.99** | **12,138,291.87** |
| **மொத்தச் சொத்துக்கள்** | | 15,189,874.70 | 15,335,676.72 |
| **பொறுப்புக்கள்** | | 5,000.00 | 2,000.00 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | 17 | 281,459.17 | 172,908.36 |
| சில்லறை சென்மதியாளர் | | **286,459.17** | **174,908.36** |
| உள்ளப்படி செலவுகள் | | | |
| | 18 | 3,939,031.00 | 4,278,570.00 |
| **நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | **3,939,031.00** | **4,278,570.00** |
| ஊழியர் நலன் | | **4,225,490.17** | **4,453,478.36** |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **10,964,384.53** | **10,882,198.36** |
| **தேறிய சொத்து/சமநிலை** | | | |
| திறைசேரி மூலதன அறிமுகம் | | 3,712,671.00 | 2,849,514.00 |
| மூலதன ஒதுக்கல் | | 4,115,000.00 | 4,115,000.00 |
| மீள் மதிப்பு ஒதுக்கீடு | | 833,975.00 | 833,975.00 |
| திரட்டிய மிகை | | 2,302,738.53 | 3,083,709.36 |
| | | **10,964,384.53** | **10,882,198.36** |

*இல. 06 தொடக்கம் 16 பக்கம் வரை காட்டப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கை மற்றும் குறிப்பு இந் நிதி விபரத்தின் அவசியமான பகுதியாகும். இந் நிதி விபரம் அரச பொது கணக்கீட்டு கட்டளைகள் நிறுவனத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது.*

..............................................

*கணக்காளர்,*

*இலங்கைப் பத்திரிகைப் பேரவை,*

*இந்நிதி அறிக்கையை தயாரித்தல் மற்றும் சமர்பித்தல் ஆகியன பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும்.*

.......................................................

*பணிப்பாளர் சபைக்கு பதிலாக,*

*பதில் பத்திரிகை ஆணையாளர்.*

*தலைவர்,*

*இலங்கைப் பத்திரிகைப் பேரவை,*

*2016, பெப்புருவரி 19.*

இலங்கைப் பத்திரிகைப் பேரவை
மாற்றப்பட்ட தேறிய சொத்து/தொகையின் அறிக்கை
2015 திசெம்பர் 31ஆந் திகதி இல் முடிவடைந்த ஆண்டிற்காக

(தொகை இலங்கை ரூபாவில் உள்ளது)

| | மூலதனப் பங்களிப்பு | மூலதன ஒதுக்கல் | மீள் மதிப்பு | திரட்டப்பட்ட மிகை/பற்றாக்குறை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 31 திசெம்பர் 2013 வரை மீதி | **10,074,500.00** | **4,115,000.00** | **777,475.00** | **(3,625,336.30)** | **11,341,638.70** |
| கணக்கீட்டு கொள்கை மாற்றம் / திருத்தம் (குறிப்பு - அ) | | | | (24,973.44) | (24,973.44) |
| திறைசேரியில் கிடைக்கப்பெற்ற நிதி | 1,000,000.00 | - | - | - | 1,000,000.00 |
| திறைசேரிக்கு மீள் கொடுப்பனவு | - | - | - | - | 0.00 |
| மூலதனத்திற்கான மாற்றம் | - | - | 56,500.00 | - | 56,500.00 |
| மூலதன மானியத்திற்கான பற்று | (8,224,986.00) | - | - | 8,224,986.00 | 0.00 |
| வருடத்திற்கான மிகை (பற்றாக்குறை) | - | - | - | (1,490,966.00) | (1,490,966.90) |
| 2014 திசெம்பர் 31 ஆந் திகதியன்று மீதி | 2,849,514.00 | 4,115,000.00 | 833,975.00 | 3,083,709.36 | 10,882,198.36 |
| கணக்கீட்டு கொள்கை மற்றும் / திருத்தம் (குறிப்பு - ஆ) | - | - | - | (125,972.00) | (125,972.00) |
| திறைசேரியில் கிடைக்கப்பெற்ற நிதி | 1,000,000.00 | - | - | - | 1,000,000.00 |
| மீள்கொடுப்பனவு - திறைசேரி | - | - | - | - | 0.00 |
| மூலதனத்திற்கான மாற்றம் | - | - | - | - | 0.00 |
| வருடத்திற்கான மிகை/பற்றாக்குறை | (136,843.00) | - | - | 136,843.00 | 0.00 |
| | - | - | - | (791,841.73) | (791,841.73) |
| 2014 திசெம்பர் 31 ஆந் திகதியன்று மீதி | 3,712,671.00 | 4,115,000.00 | 833,935.00 | 2,302,738.00 | 10,964,384.53 |

இலங்கைப் பத்திரிகைப் பேரவை
மாற்றப்பட்ட தேறிய சொத்து/தொகையின் அறிக்கை
2015 திசெம்பர் 31 ஆந் திகதி இல் முடிவடைந்த ஆண்டிற்காக

(தொகை இலங்கை ரூபாவில் உள்ளது)

குறிப்பு - (அ) கணக்கீட்டுக் கொள்கை மாற்றம்/தவறை திருத்தல்

வருடத்தில் பேரவையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள செம்மையாக்கல்

| | |
|---|---|
| 2013 ஆம் ஆண்டுக்கான டிப்ளோமா பதிவு | 12,000.00 |
| தவறை திருத்தல் - தேய்மானம் | 48,433.33 |
| பத்திரிகை விற்பனை | 4,816.50 |
| 2013 ஆம் ஆண்டுக்கான பத்திரிகை பதிவு | 40,250.00 |
| | 105,499.83 |
| தவறை திருத்தல் - நிலையான சொத்து | (44,180.00) |
| டோனர் கொள்வனவு - 2012 | (34,800.00) |
| தவறை திருத்தல் - புத்தக வைப்பு | (15,250.00) |
| தவறை திருத்தல் - தேய்மானம் | (25,043.27) |
| 2012, 2013ஆம் ஆண்டுக்கான டிப்ளோமா கட்டண செம்மையாக்கல் | (1,200.00) |
| | (10,000.00) |
| | (24,973.44) |

குறிப்பு - (ஆ) கணக்கீட்டு கொள்கை மாற்றம்/தவறை திருத்தல்

வருடத்திற்கான பேரவை நிதிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள செம்மையாக்கல்

| | |
|---|---|
| சம்பளம் செலுத்தப்படாமை | 573.00 |
| பத்திரிகை விற்பனை | 2,736.50 |
| 2014 ஆம் ஆண்டுக்கான பத்திரிகைப் பதிவு | 11,000.00 |
| | 14,309.50 |
| தற்காலிக சம்பளம் | (1,500.00) |
| தவறை திருத்தல் பணிக்கொடை | (136,152.00) |
| தவறை திருத்தல் உள்ளப்படி செலவு | (2,629.60) |
| | (125,972.10) |

இலங்கை பத்திரிகைப் பேரவை

*காசு பாய்ச்சுக் கூற்று*

*2015, திசெம்பர் 31ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டிற்காக*

| (எல்லா தொகையும் இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளது) | 2015 | 2014 |
|---|---|---|
| | ரூ. சதம் | ரூ. சதம் |
| **செயற்பாட்டு நடவடிக்கையிலான பாய்ச்சுக் கூற்று** | | |
| வருடத்திற்கான மிகை/(பற்றாக்குறை) | (791,841.73) | (1,490,966.90) |
| **செம்மையாக்கல்** | | |
| பெறுமானத் தேய்வு | 1,430,183.27 | 1,427,923.77 |
| எழுதி நீக்கல் | 66,205.24 | - |
| பெறுமான தேய்வுக்கும் நிலையான சொத்து செம்மையாக்கல் | - | 35,489.94 |
| முன்னைய ஆண்டு செம்மையாக்கல் | (125,972.10) | (24,973.44) |
| மூலதனத்திற்கான மாற்றம் | - | 56,500.00 |
| மூலதன மாற்றத்திற்கு முன்னைய செயற்பாட்டு இலாபம் | **578,574.68** | **3,973.37** |
| **மூலதன மாற்றம்** | | |
| பணிக்கொடை ஒதுக்கீடு | (339,539.00) | 540,363.00 |
| அதிகரிப்பு/குறைப்பு கிடைக்கப்பெற்ற வருமானம் | 10,592.71 | 57,180.54 |
| அதிகரிப்பு/குறைப்பு இருப்புக்கள் | 22,364.76 | 61,400.96 |
| அதிகரிப்பு/குறைப்பு உற்சவ முற்பணம் | 4,500.00 | 1,000.00 |
| அதிகரிப்பு/குறைப்பு உள்ளூர் கொள்வனவு முற்பணம் | 10,000.00 | (10,000.00) |
| அதிகரிப்பு/குறைப்பு வைப்புக்களும் முற்கொடுப்பனவுகளும் | (71,008.32) | 16,368.34 |
| அதிகரிப்பு/குறைப்பு கிடைக்கப்பெற்ற இடருதவிக் கடன் | 356,373.50 | 271,823.50 |
| அதிகரிப்பு/குறைப்பு சில்லறை வருமதியாளர் | 3,000.00 | - |
| அதிகரிப்பு/குறைப்பு உள்ளபடி செலவுகள் | 108,550.81 | 66,086.39 |
| | **683,409.14** | **1,008,196.10** |
| **செயற்பாட்டு மூலதனத்தின் பயன்பாடு** | | |
| **பணிக்கொடை** | - | - |
| மூலதன பயன்பாட்டின் நிகர காசுப் பாய்ச்சு | **683,409.14** | **1,008,196.10** |
| **செயற்பாட்டு மூலதனப் பயன்பாடு** | | |
| நிலையான சொத்து கொள்வனவு | (989,215.00) | (1,026,741.25) |
| நிதி முதலீடு | (806,168.63) | (877,600.81) |
| | **(1,795,383.63)** | **(1,904,342.06)** |
| **முதலீடு செயற்பாடுகளின் நிதி பெறுதல்** | | |
| அரச திறைசேரி நிதி (கிடைக்கப்பெற்ற) | 1,000,000.00 | 1,000,000.00 |
| **நிதி செயற்பாடுகளின் நிதி பெறுதல்** | | |
| பணமும் பணத்தின் பயன்பாடும் குறைவு/அதிகரிப்பு | **1,000,000.00** | **1,000,000.00** |
| வருட தொடக்கத்தின் பணமும் முற்பணத்தின் பயன்பாடும் | **(111,974.49)** | **103,854.04** |
| வருட இறுதியில் பணமும் பணத்தின் பயன்பாடும் | **651,864.64** | **548,010.60** |
| | **539,890.15** | **651,864.64** |

*06 தொடக்கம் 16 வரையிலான பக்கங்களில் காட்டப்பட்டுள்ள நிதிக் கொள்கைகளும் குறிப்புகளும் நிதிக் கூற்றின் முக்கிய பகுதிகளாகும்.*

1. உறைவிட மற்றும் சட்ட வடிவம்:

1973 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தினால் இலங்கைப் பத்திரிகைப் பேரவை அமைக்கப்பட்டுள்ளது. பதிவு செய்யப்பட்ட அலுவலகமாகவும், சேவைக்கான முக்கிய இடமான இலங்கைப் பத்திரிகைப் பேரவை இல. 155/15 காசல் வீதி, பொரளை, கொழும்பு 08 என்னும் இடத்தில் அமைந்துள்ளது.

1.1 முக்கிய செயற்பாடுகளும் நடவடிக்கைகளின் தன்மையும்:

இலங்கைப் பத்திரிகை சுதந்திரத்தை தேசிய அபிவிருத்திக்கான கலாசார அங்கமொன்றாகப் பிரபல்யப்படுத்துவதே இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் செயற்பாடாகும்.

1.2 கணக்கு அறிக்கை தயாரிப்பின் அடிப்படை:

நிதிக் கூற்றுகளை கணக்கீட்டு நியமனங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்ட கணக்குகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. விசேடமாக குறிப்பிடப்படாவிடின் அவை நிதிக் கொள்கை கணக்கில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சகல வருடத்திற்கும் தொடர்ந்து உரித்தாகும்.

1.3 இணக்க அறிக்கை கூற்றுக்கள்:

இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் நிதிக் கூற்றுக்கள் அனைத்தும் இலங்கையின் பொதுத்துறை கணக்கியல் தர நிலைகளுக்கு அமைவாகவே தயாரிக்கப்படுகின்றன. (SLPSAS)

1.4 தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு:

எதிர் காலத்தில் பேரவையை நடத்துவதற்கு போதியளவு வளங்கள் உள்ளது என்பதற்கு பணிப்பாளர் சபை திருப்தியடைந்துள்ளது. எண்ணக்கருக்கு அமைவாக நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது.

1.1.2 ஒப்பீட்டு தகவல்கள்:

கணக்கு கொள்கைகள் தொடர்ந்து கம்பனியுடன் ஒத்துச் செல்வதுடன் முன்னைய வருடத்திலும் தொடர்ந்து பயன்படுத்தப்படும்.

1.1.3 கணிசநிலை மற்றும் திரட்டல்:

ஒவ்வொரு மூலப் பொருட்களினதும் ஒத்தத் தன்மை நிதிக் கூற்றில் வேறாக பிரித்துக் காட்டப்பட்டுள்ளது. ஒத்த தன்மையற்றவை வேறாக பிரித்து காட்டப்பட்டுள்ளது.

1.1.4 கணக்கீட்டு கொள்கையின் மாற்றம்:

முன்னைய நிதி ஆண்டின் நிதிக் கொள்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

2. குறிப்பிடத்தக்க சுருக்கமான கணக்கீட்டுக் கொள்கை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கொள்கைகள் நிதிக் கூற்றின் எல்லா காலத்திற்கும் ஏற்புடையதாகும்.

2.1 சொத்து, ஆலை மற்றும் உபகரணம்:

2.1.1 அங்கீகாரமும் அளவீடுகளும்:

எல்லா சொத்து ஆலை மற்றும் உபகரணங்கள் நிதிக் கூற்றுகளில் கிரயத்தில் திரட்டப்பட்ட பெறுமானத் தேய்வு மற்றும் திரட்டப் பட்ட பலவீனத்திற்கு எதிரான இழப்புகளின் குறைந்த பெறுமதியிலே பதிவு செய்யப்படும். மோட்டார் வாகனங்கள் அதன் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் பதிவு செய்யப்படும். மற்றும் அதன் நியாயமான பெறுமதியில் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட தினத்திலான பெறுமதியில் இருந்து அடுத்தடுத்து திரட்டப்பட்ட பெறுமானத் தேய்வு மற்றும் பலவீனத்திற்கு எதிரான இழப்புக்கள் குறைக்கப்பட்டே பதிவு செய்யப்படும் சொத்து ஆலை மற்றும் உபகரணங்களுக்கான மீள் கொண்டுசெல்லும் பெறுமதி இழப்புகளுக்கு எதிராக மதிப்பீடு செய்யப்படும். எவ்வாறெனின், சில நிகழ்வுகள் மற்றும் மாற்றங்களின் காரணமாக அவற்றின் கொண்டு செல்லப்படும் பெறுமதியானது மீளப் பெற முடியாது எனும் சூழ்நிலைகளில் ஆகும்.

2.1.2 தேய்மானம்:

காணி தவிர்ந்த அனைத்து சொத்து ஆலை மற்றும் உபகரணங்களுக்கான பெறுமானத் தேய்வு ஏற்பாடானது நேர் கோட்டு முறையில் கிரயம் அல்லது மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் கணிப்பீடு செய்யப்படும்.

| சொத்துவர்க்கம் | ஆண்டு |
|---|---|
| மோட்டார் வாகனம் - (10%) | 10 |
| தளபாட இணைப்புக்கள் - (20%) | 05 |
| அலுவலக நலனோம்பு உபகரணம் - (20%) | 05 |
| நூலக நூல்கள் - (20%) | 05 |

ஒவ்வொரு நிதி ஆண்டிலும் எஞ்சிய சொத்துக்களின் பெறுமானம் காட்டப்பட்டிருப்பதுடன் அவசியமாயின் செம்மையாக்கப்பட்டுள்ளது. கொள்வனவின்போது வருடத்தில் தேய்விறக்கம் வழங்கப்பட்டதுடன், விற்பனையின்போது தேய்விறக்கம் செய்யப்படவில்லை.

பேரவை கொள்கையின் சொத்து பயன்பாடன்று தேய்மானக் கணக்கு

2.1.3 புத்தக மதிப்பீடு:

விலை மதிப்பீட்டில் 95% (சந்தை மதிப்பீடு) புத்தக மதிப்பீட்டில் கணக்கிடப்பட்டுள்ளது.

2.2 நிதி மற்றும் நிதி சமநிலை:

கையிருப்பு ரொக்கம் நிதி மற்றும் நிதி சமநிலையில் தெளிவாக்கப்பட்டதுடன் வைப்புக்கள், குறைகளை கலைப்பு செய்தல்.

2.3 முதலீடுகள்:

சேமிப்பு கணக்கில் முதலீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் இம் முதலீடுகள் செலவுக் கணக்காக கொள்ளப்பட்டுள்ளது.

2.4 இருப்புக்கள்:

வெளியீடுகளும், காகிதாதியும் இறுதி இருப்புக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், வெளியீடுகள் செலவுக் கணக்கில் காட்டப்பட்டுள்ளது.

2.5 ஏனைய பெறுகைகள்:

ஏனைய பெறுகைகள் பணமாக குறிப்பிடப்பட்டுள்ளது. டிப்ளோமா பெறுகைகள் தவிர்ந்த ஏனைய எல்லா பெறுகைகளும் உள்ளப்படி அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளது.

2.6 பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்:

கடந்த விடயங்களில் கடமைப்பாடுகள் ஏற்படின் ஐந்தொகையில் பொறுப்புக்கள் காட்டப்படும். வெளிப்பாச்சின் விளைவுகளின் பொருளியல் நலன்கள் கடன்களில் எதிர்பார்க்கப்படுகிறது. வருமதியாள் செலுத்துகையில் நிபந்தனைகள் அல்லது ஒரு வருட ஐந்தொகையில் குறிப்பிடப்படும். ஒரு வருடத்தின் பின்னர் ஐந்தொகையில் செலுத்தப்படும் பொறுப்புக்கள் ஐந்தொகையில் நடைமுறை பொறுப்புக்கள் அற்றவை என்று ஏற்றுக்கொள்ளப்படும்.

கம்பனிக்கு சட்டபூர்வ அல்லது ஆக்கபூர்வ நிபந்தனைகள் ஐந்தொகையில் ஏற்பாடுகள் உணரப்பட்டு வெளிப்பாச்சி பொருளியல் நலன்கள் தேவைப்படின் செம்மையாக்கல் செய்யப்படும்.

2.7 ஊழியர் நலன்கள்:

2.7.1 தெளிவான பங்களிப்பு திட்டங்கள்:

பேரவையின் அனைவரும் ஊழியர் சேமலாப நிதியத்திலும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திலும் உறுப்பினர்களாக இருப்பதுடன் ஒவ்வொருவரதும் அடிப்படை சம்பளத்திற்கு பேரவை மூலம் 12% மற்றும் 13% வீதம் பங்களிப்பு செய்யப்படுகிறது.

2.7.2 சலுகை திட்டங்கள்:

திட்ட வரவு முறையைப் பயன்படுத்தி ஓய்வுப் பணிக்கொடை சலுகையாக குறிப்பிடப்பட்டுள்ளதோடு பெறுகைகளும் இழப்புக்களும் வரவு செலவு கணக்கில் மிச்சப்படுத்தப்பட்டுள்ளது.

2.8 நிதிசாதனை கூற்று:

2.8.1 வருமான அங்கீகாரம்:

பொருளாதார சலுகையில் வருமான அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் கம்பனி வருமானத்திலும் கூட்டுறவு செலவுகளிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. தரமான நிலையில் வருமானம் கணிக்கப்பட்டுள்ளது.

2.8.2 இலங்கை அரசின் பங்களிப்பு:

உள்ளப்படி அடிப்படையில் இலங்கை அரசின் பங்களிப்பு பெறப்பட்டது.

2.8.3 வருமான வட்டி:

வட்டி முறையில் இலாபம் அல்லது நட்டம் வருமான வட்டியில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

2.8.4 ஏனைய வருமானம்:

ஏனைய வருமான அதிகரிப்பு அடிப்படையில் அடையாளம் காட்டப்பட்டுள்ளது.

2.8.5.1 செலவுகள்:

பேரவையின் சகல செலவுகளும் அன்றாட செலவுகளில் உள்ளடக்கப்படுவதுடன் மற்றும் சொத்து பராமரிப்பு, உபகரணங்கள் ஆகியன நிதி பெறுபேறுகளில் காட்டப்பட்டுள்ளது.

2.8.5.2 செலவின் வகைகள்:

நிதி பெறுகைகள் கூற்றில் நியாயமான முறையில் காட்டப்பட்டுள்ளது என்பதே ஆளுநர்களின் எண்ணமாகும்.

2.9 நிதி பாய்ச்சுக் கூற்று:

மறைமுகமான முறையைப் பயன்படுத்தி நிதிப்பாய்ச்சுக்கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

2.10 அறிக்கை காலத்தின் பின் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சிகள்:

நிதிக் கூற்று அறிக்கை சமர்ப்பிக்கும் இறுதித் திகதியில் அறிக்கையில் சாதகமான மற்றும் பாதகமான நிகழ்வுகள் ஏற்படலாம். தேவையேற்படின் அறிக்கையிடும் காலத்தின் பின்னர் நிகழ்வுகள் ஏற்படின் செம்மையாக்கல் அல்லது வெளியிடல் ஆகியன நிதிக் கூற்றில் செய்யப்பட்டுள்ளது.

| (எல்லாத் தொகையும் இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளது) | 2015 | 2014 |
|---|---|---|
| | ரூ. சதம் | ரூ. சதம் |

**குறிப்பு 3 - இலங்கை அரசின் பங்களிப்பு**

இலங்கை அரசிடமிருந்து பயன்பாட்டிற்கும் மற்றும் பராமரிப்புக்குமான பெறப்பட்ட ஒதுக்கீடு.

**குறிப்பு 4 - புத்தக விற்பனை**

| | 2015 | 2014 |
|---|---|---|
| புத்தக விற்பனை | 13,800.00 | 30,305.00 |
| குறை - கிடைத்த வருமான செம்மையாக்கல் | - | 7,505.00 |
| குறை - புத்தக விற்பனை செலவு | 13,707.23 | 22,909.66 |
| | **92.77** | **(109.66)** |

**குறிப்பு 5 - வேதனம், கூலி மற்றும் ஊழியர் அனுகூலம்**

| | 2015 | 2014 |
|---|---|---|
| வேதனமும் கூலியும் | 7,511,380.59 | 6,053,177.46 |
| ஊ.சே.நிதி - பங்களிப்பு | 1,042,437.59 | 728,608.82 |
| ஊ.ந.நிதி - பங்களிப்பு | 208,487.54 | 145,721.75 |
| ஊ.சே.நிதி - மேலதிக கட்டணம் | 877.92 | - |
| மேலதிக நேரமும் விடுமுறைக் கொடுப்பனவும் | 346,627.82 | 495,614.31 |
| உறுப்பினர் கட்டணம் | 348,000.00 | 552,000.00 |
| உபகாரத் தொகை | 1,018,320.00 | 540,363.00 |
| கணக்காய்வுக் குழுக்கான கட்டணம் | - | 60,000.00 |
| ஏனைய செலவுத் தொகை | 20,028.00 | 530,611.50 |
| | **10,496,159.46** | **9,106,096.84** |

**குறிப்பு 6 - விநியோகமும் தேவைப்பொருளும்**

| | 2015 | 2014 |
|---|---|---|
| எழுது கருவிகள் | 155,594.36 | 150,338.19 |
| எரிபொருளும், மசக்கிடலும் | 450,893.35 | 604,491.10 |
| எரிபொருள் கொடுப்பனவு | - | 240,000.00 |
| அலுவலக தேவைகள் | 45,065.25 | 11,715.10 |
| மருந்து விநியோகம் | - | - |
| சீருடை | 20,000.00 | 16,000.00 |
| புதினப் பத்திரிகைகளும், பருவ வெளியீடுகளும் | 7,070.00 | 13,300.00 |
| | **678,622.96** | **1,035,844.39** |

**குறிப்பு 7 - பயன்பாட்டுச் செலவு**

| | 2015 | 2014 |
|---|---|---|
| தொலைபேசிக் கட்டணம் | 304,654.20 | 267,800.31 |
| அஞ்சல் கட்டணம் | 45.434.00 | 45,310.00 |
| மின்சாரம் | 198,044.55 | 248,912.75 |
| அலுவலக வாடகை கட்டணம் | 2,160,000.00 | 2,160,000.00 |
| நீர்க் கட்டணம் | 54,662.82 | 58,289.27 |
| பாதுகாப்புக் கட்டணம் | 378,423.94 | 380,495.89 |
| | **3,141,219.51** | **3,160,808.22** |

| (எல்லா தொகையும் இலங்கை ரூபாவில் உள்ளது) | 2015 | 2014 |
|---|---|---|
| | ரூ. சதம் | ரூ. சதம் |
| **குறிப்பு 8 - ஏனைய பயன்பாட்டுச் செலவுகள்** | | |
| போக்குவரத்து | - | - |
| பிரயாணச் செலவுகள் | - | 360,000.00 |
| பிரயாணம் - அலுவலர்கள் | 83,850.00 | 44,042.00 |
| பிரயாணம் - உறுப்பினர்கள் | 58,872.00 | 92,950.00 |
| பிரயாணம் - வெளிநாடு | 106,861.62 | 141,807.25 |
| விளம்பரங்களும் வெளியீடுகளும் | 318,617.18 | 133,775.60 |
| அச்சிடலும் கட்டுதலும் | 98,945.00 | 132,537.00 |
| திருத்தங்களும் பராமரிப்பும் | 698,911.24 | 711,185.96 |
| உபசரிப்புச் செலவுகள் | 116,036.50 | 1[illegible]8,161.00 |
| அலுவலக மற்றும் சமய வைபவ செலவுகள் | 1,675.00 | 56,316.00 |
| எழுதி நீக்கப்பட்ட அலுவலக தளபாடம், பொறுத்துதல் | 66,205.24 | - |
| கணக்காய்வுக் கட்டணம் | 39,648.00 | 39,648.00 |
| எதிர்பாராத செலவுகள் | 80,395.00 | 12,086.00 |
| வங்கிக் கட்டணங்கள் | 12,712.82 | 7,039.30 |
| வாகன காப்புறுதியும் உத்தரவுப் பத்திரமும் | 189,117.88 | 183,686.55 |
| சட்டம் சம்பந்தமான கட்டணம் | 21,600.00 | 21,600.00 |
| இணையத்தள செலவுகள் | 46,600.00 | - |
| நன்கொடை | - | - |
| | **1,940,047.48** | **2,114,834.66** |
| **குறிப்பு 9 - மானியம் மாற்றுக் கொடுப்பனவுகள்** | | |
| மாகாண தொடர்பாடல் கருத்தரங்கு | 1,020,021.15 | 1,607,661.33 |
| டிப்ளோமா பாடநெறி | 278,780.00 | 457,192.53 |
| "தயட்ட கிருள" நிகழ்ச்சி | - | 1,734,092.81 |
| வெளியீடுகளும் ஆய்வும் | 228,250.00 | 347,000.00 |
| அலுவலர்களுக்கான பாடநெறி | 16,500.00 | - |
| | **1,543,551.15** | **4,145,946.67** |

| (எல்லா தொகையும் இலங்கை ரூபாவில் உள்ளது) | 2014 | 2013 |
|---|---|---|
| | ரூ. சதம் | ரூ. சதம் |
| **குறிப்பு 10 - நிதி மற்றும் நிதி சமநிலை** | | |
| வங்கி வைப்பு | 539,890.15 | 651,864.64 |
| | **539,890.15** | **651,864.64** |
| **குறிப்பு 11 - ஏனைய நடைமுறைச் சொத்து** | | |
| சம்பள மீளப் பெறுகை | - | 13,497.25 |
| சம்பள மீளப் பெறுகை - தொலைபேசிக் கட்டணம் | - | 2,095.46 |
| பதிவு மற்றும் பிந்திய கட்டணங்கள் | 7,000.00 | 2,000.00 |
| புத்தக விற்பனை | 6,370.00 | 6,370.00 |
| | **13,370.00** | **23,962.71** |
| **குறிப்பு 12 - இறுதியிருப்பு** | | |
| புத்தக இருப்பு | 334,275.53 | 381,880.01 |
| காகிதாதி இருப்புக்கள் | 120,933.98 | 105,863.36 |
| விற்பனை அல்லது திரும்பப் பெறுகையின் அடிப்படையில் | 74,655.50 | 64.486.40 |
| | **529,865.01** | **552,229.77** |
| **குறிப்பு 13 - வைப்புக்களும் மீள்கொடுப்பனவுகளும்** | | |
| பிணை வைப்புக்கள் - காசல் வீதிக் கட்டடம் | 540,000.00 | 540,000.00 |
| பிணை வைப்புக்கள் - தண்ணீர் போத்தல்கள் | 5,600.00 | 4,000.00 |
| எரிபொருள் வைப்புக்கள் | 75,000.00 | 75,000.00 |
| காப்புறுதி மற்றும் உத்தரவுப்பத்திரக் கட்டணம் | 146.530.05 | 77.121.73 |
| **மொத்தம்** | **767,130.05** | **696,121.73** |
| **குறிப்பு 14 - பெறப்பட்ட இடர் உதவிக் கடன்கள்** | | |
| வருட ஆரம்பத்தின் மீதி | 1,251,206.00 | 1,523,029.50 |
| வருடத்தில் கொடுக்கப்பட்ட கடன்கள் | 95,130.00 | 99,920.00 |
| வருடத்தில் மீளப்பெறப்பட்ட கடன்கள் | **1,346,336.00** | **1,622,949.50** |
| **வருட இறுதியின் மீதி** | (451,503.50) | (371,743.50) |
| | **894,832.50** | **1,251,206.00** |

இலங்கைப் பத்திரிகைப் பேரவை
2015 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிக் கூற்றுக்களின் அறிக்கை

(எல்லாத் தொகையும் இலங்கை ரூபாவில் உள்ளது)

## குறிப்பு 15 - சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணம்

| | வாகனங்கள் | தளபாடங்களும் பொருத்துக்களும் | அலுவலக நலனோம்பு உபகரணம் | நூலக நூல்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| விலை/மதிப்பீடு | ரூ. சதம் | ரூ. சதம் | ரூ. சதம் | ரூ. சதம் | ரூ. சதம் |
| 01.01.2015 அன்று மீதி | 10,001,000.00 | 1,261,519.00 | 2,906,241.83 | 179,844.48 | 14,348,605.31 |
| கூட்டுக | 610,000.00 | 91,260.00 | 276,030.00 | 11,925.00 | 989,215.00 |
| நீக்கப்பட்டவை/ எழுதி நீக்கப்பட்டவை | 70,000.00 | | 107,390.24 | | 177,390.24 |
| 2015.12.31 அன்று மீதி | 10,541,000.00 | 1,352,779.00 | 3,074,881.59 | 191,769.48 | 15,160,430.07 |
| தேய்மானம் | | | | | |
| 2015.01.01 ஆண்டிற்கான மீதி | 2,738,000.00 | 1,021,140.00 | 1,486,284.17 | 104,063.16 | 5,349,487.33 |
| | 914,000.00 | 105,100.00 | 383,585.00 | 27,498.27 | 1,430,183.27 |
| | 6,000.00 | | 105,185.00 | | 111,185.00 |
| 2015.12.31 அன்று மீதி | 3,646,000.00 | 1,126,240.00 | 1,764,684.17 | 131,561.43 | 6,668,485.60 |
| மதிப்பீடு | | | | | |
| 01.01.2015 ஆந் திகதியன்று | 7,263,000.00 | 240,379.00 | 1,419,957.66 | 75,781.32 | 8,999,117.98 |
| 31.12.2015 ஆந் திகதியன்று | 6,895,000.00 | 226,539.00 | 1,310,197.42 | 60,208.05 | 8,491,944.47 |

(எல்லா தொகையும் இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளது)

| | 2014 | 2013 |
|---|---|---|
| | ரூ. சதம் | ரூ. சதம் |
| **குறிப்பு 16 - முதலீடுகள் - சேமிப்புக் கணக்கு (நிதி மூலதன நோக்கம்)** | | |
| மக்கள் வங்கி - கடன் | 1,734,333.37 | 1,250,203.76 |
| மக்கள் வங்கி - ஆய்வு நிதி | 1,507,037.66 | 1,212,556.69 |
| மக்கள் வங்கி - பணிக்கொடை | 703,971.49 | 676,413.44 |
| | **3,945,342.52** | **3,139,173.89** |
| **குறிப்பு 17 - உள்ளபடி செலவுகள்** | | |
| மேலதிக நேரம் | 80,631.21 | 46,219.06 |
| பிரயாணக் கொடுப்பனவு | 4,800.00 | 400.00 |
| தொலைபேசி | 32,081.12 | 18,973.30 |
| கணக்காய்வுக் கட்டணம் | 145,824.00 | 106,176.00 |
| எரிபொருள் | 9,001.27 | - |
| ஏனைய கொடுப்பனவு | 6,000.00 | - |
| ஊ. சே. நி. மேலதிகக் கட்டணம் | 877.92 | - |
| நீர் வரி | 2,243.65 | - |
| பத்திரிகைகளும் பருவ வெளியீடுகளும் | - | 1,140.00 |
| | **281,459.17** | **172,908.36** |
| **குறிப்பு 18 - ஊழியர் சலுகைகள்** | | |
| வருட ஆரம்பத்தின் மீதி | 4,278,570.00 | 3,738,207.00 |
| முன்னைய ஆண்டு செம்மையாக்கல் | 136,152.00 | - |
| வருடத்தில் செலுத்தப்பட்ட பணிக்கொடை | (1,494,011.00) | - |
| வருடத்திற்கான தொகை | **2,920,711.00** | **3,738,207.00** |
| வருட இறுதியில் மீதி | 1,018,320.00 | 540,363.00 |
| | **3,939,031.00** | **4,278,570.00** |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதித்திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No - எம்சிடீ/சீ/எஸ்எல்பீசீ/1/15/எப்ஏ-1
ඔබේ අංකය / உமது இல / Your No -
දිනය / திகதி / Date - 2016, செத்தெம்பர் 30

தலைவர்,
இலங்கை பத்திரிகைப் பேரவை,

**இலங்கை பத்திரிகைப் பேரவையின் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2) (சீ) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 1973 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க இலங்கைப் பத்திரிகை பேரவை அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் பேரவையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம், விரிவான அறிக்கையொன்று பேரவையின் தலைவருக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

1.2 *நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு*

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.3 *கணக்காய்வாளரின் பொறுப்பு*

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பேரவையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பேரவையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின்

අංක 306/72 පොල්දුව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone. +94 (0) 112887028 -
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. +94 (0) 112887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail. www.auditorgeneral.gov.lk

வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும்(4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகிறேன்.

### 1.4 *முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை:*

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. *நிதிக்கூற்றுக்கள்:*

### 2.1 *முனைப்பழியுள்ள அபிப்பிராயம்:*

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் 2015, திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 *நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்:*

#### 2.2.1 *இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம்:*

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 09 இன் பிரகாரம் கிரயம் அல்லது தேறிய தேறக்கூடிய பெறுமதி ஆகிய பெறுமதிகளில் ஆகக் குறைந்த பெறுமதியின் அடிப்படையில் இருப்பின் பெறுமதியிடப்பட வேண்டுமெனினும் ரூபா 74,650 கிரயமான இருப்புக்களை ரூபா 69,450 தொகையில் விற்பனை செய்வதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்திருக்கும் போது அந்த இருப்புக்கள் கிரயத்தில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

#### 2.2.2 *கணக்கீட்டுக் கொள்கை:*

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன:

(அ) கணக்குக் குறிப்பு இலக்கம் 2.7.2 இன் படி, பேரவையின் ஒய்வூதியப் பணிக்கொடை நலன்பொறுப்பின் தற்போதைய பெறுமதி எதிர்வுகூறல் அலகு கடன் முறைமையின் அடிப்படையில் பெறுமதியிடப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காது ஆண்டின் இறுதியில் பணிக்கொடை நலன் கணக்கின் அதிகரிப்பு அல்லது குறைவு நிதிச் செயலாற்றல் அறிக்கைகளில் சீராக்கல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) மூலதனச் செலவினத்திற்கான அரசாங்கத்தின் மானியங்களை கணக்கு வைப்பதற்கான கணக்கீட்டுக் கொள்கை வெளிப்படுத்தப்படாமல் மீளாய்வாண்டிலும் கடந்த 05 ஆண்டுகளிலும் 2010 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டுகளுக்குரிய காலக்கழிவாக முறையே ரூபா 136,843 மற்றும் ரூபா 8,224,986 தொகைகள் மூலதன மானியக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்ட மிகை/பற்றாக்குறைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

#### 2.2.3 *கணக்கீட்டுக் குறைபாடுகள்:*

மீள் கணிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களை அகற்றும்போது உரிய மீள்கணிப்பீட்டு ஒதுக்கப் பெறுமதி நிறுத்தி வைக்கப்பட்ட இலாபத்திற்கு மாற்றப்பட வேண்டியிருந்த போதிலும், அகற்றப்பட்ட சொத்துக்களுக்குரிய ரூபா 833,975 ஒதுக்கப் பெறுமதி நிறுத்திவைக்கப்பட்ட இலாபத்திற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.

### 2.3 *சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை:*

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங் களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 880 | அரசாங்கத்தின் பணத்தைக் கையேற்றல் அல்லது பொறுப்பில் இருக்கின்ற உத்தியோகத்தர்கள், அரசாங்கத்தின் கணக்குகளுக்குரிய கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை உறுதிப்படுத்துகின்ற மற்றும் காசோலைகளில் கையொப்பமிடுகின்ற உத்தியோகத்தர்கள், பிணைக் கட்டளைச் சட்டத்திற்கு இணங்க பிணை வைக்கவேண்டியிருந்த போதிலும் பேரவையில் அவ்வாறான கடமைகளில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பிணைப்பணம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 102 முதல் 110 வரை | மீளாய்வாண்டிற்குரிய வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கையின்படி தொலைந்து போன அல்லது பயன்படுத்த முடியாதுள்ள ரூபா 66,205 தொகையான பொருட்கள் இனங்காணப்பட்டிருந்தும் அது தொடர்பாக தொடர்புடைய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) சனாதிபதி செயலகத்தின் 2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க கடிதத்தின் 1 ஆம் பந்தி | தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரமும் 2012 யூலை 10 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுவின் கட்டளை இலக்கம் 07 இன் படியும் பத்திரிகைப் பேரவையை அரசாங்கத்தின் கட்டிடமொன்றில் நடாத்திச் செல்லப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், பேரவை ஆரம்பம் முதல் 40 வருடங்கள் அளவிலான காலம் வாடகை அடிப்படையில் தனியார் கட்டிடங்களிலில் நடாத்திச் செல்லப்பட்டிருந்ததுடன் அதற்காக 2006 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை ரூபா 13,730,500 கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு:

### 3.1 *நிதி விளைவுகள்:*

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டின் போது பேரவையின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 791,842 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,490,967 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 699,125 தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் அரசாங்கம் மானியம் மற்றும் ஏனைய வருமானம் முறையே ரூபா 860,000 இனாலும் ரூபா 202,546 இனாலும் குறைவடைந்தமை மற்றும் அதற்கு ஒத்தாக மீண்டெழும் செலவினம் ரூபா 1,761,670 இனால் குறைவடைந்தமை நிதி விளைவுகளின் முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டிருந்ததுடன் அது அந்த சில வருடங்களிலும் தளம்பலடைந்திருந்தது. ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை சீராக்கியதன் பின்னர் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 6,704,176 தொகையான பங்களிப்பு மீளாய்வாண்டின் போது ரூபா 11,003,228 வரை 39 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 4. *செயற்பாட்டு மீளாய்வு:*

### 4.1 *செயலாற்றல்:*

(அ) 1973 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க இலங்கை பத்திரிகைப் பேரவை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் பேரவையின் பிரதான நோக்கங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது:-

(i) பத்திரிகை சுதந்திரத்தைப் பாதுகாத்தல், அந்த சுதந்திரத்தை தவறான முறையில் பயன்படுத்துவதைத் தடுத்தல், ஏற்றுக்கொள்ளப்பட்ட உயர் தொழில் நிலைக்கு இணங்க பத்திரிகைகளின் வடிவத்தைப் பாதுகாத்தல்;

(ii) பத்திரிகைகளை முறைமைப்படுத்துதல் மற்றும் பத்திரிகைகளை நடாத்திச் செல்வதற்குரிய விடயங்கள் தொடர்பாக அரசாங்கத்திற்கு அனுசரணையாக இருத்தல்;

(iii) விடயங்கள் தொடர்பான உண்மையான கூற்றுக்களை செய்திகளாக செய்திப் பத்திரிகைகளில் பிரசுரிக்கும் சுதந்திரத்தைப் பாதுகாத்தல்;

(iv) பத்திரிகை மற்றும் பத்திரிகை நிருபர்களினால் உயர்வான பத்திரிகை நிருபர்களுக்கான பண்பாட்டு விழுமியங்கள் பேணப்படுகின்றமை தொடர்பாக பொறுப்புக்கூறல்;

(ஆ) பத்திரிகைப் பேரவை அதிகாரச்சட்டத்தின் 15 ஆவது பிரிவு மற்றும் 30(1) ஆம் பிரிவுகளின் பிரகாரம் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட போலியான, அவமரியாதைக்குரிய மற்றும் பண்பாடற்ற கூற்றுக்கள் தொடர்பாக தேடிக் கண்டறிந்து குற்றவாளிகளை நீதிமன்றத்திற்கு அனுப்புவதற்காக பேரவையில் பேணப்பட்ட பொறிமுறை போதியளவில் காணப்படா திருந்ததுடன் அவ்வாறான நாளிதழ்கள் பதிவுசெய்யப்பட்ட நாளிதழ்களாக விற்பனை செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் பேரவைக்கு அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் பேரவையால் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பத்திரிகைப் பேரவை அதிகாரச்சட்டத்தின் 25 ஆம் பிரிவின்படி சகல பத்திரிகைகளும் பத்திரிகை பேரவையில் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு பதிவு செய்யப்படாது சந்தைக்கு விநியோகிக்கப்பட்ட பத்திரிகைகள் தொடர்பாக தேவையான சட்டங்கள் மற்றும் விதிகளை உருவாக்குவதற்கு அதிகாரச்சட்டத்தின் 30 ஆவது பிரிவின்படி அதிகாரம் காணப்பட்ட போதிலும் பேரவையினால் அதற்காக முறையான பொறிமுறையொன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை.

(ஈ) மிகவும் உயர் தொழிற்தகைமையுள்ள பொது சன ஊடகமொன்றை ஏற்படுத்துவதற்காக புத்தகங்களை அச்சிடல் மற்றும் விடயங்களுக்குரிய கலந்துரையாடல்களை நடாத்துவது நோக்காக இருந்த போதிலும், அவை நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது செய்தித்தாள்களுக்கு எதிராக பேரவைக்கு 18 முறைப்பாடுகள் கிடைத்திருந்ததுடன் 2014 ஆம் ஆண்டில் தீர்க்கப்படாதிருந்த 34 முறைப்பாடுகளுடன் தீர்க்கப்படாதிருந்த மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 52 ஆகும். அதில் 23 முறைப்பாடுகளுக்கு ஆண்டின் இறுதிவரையிலும் தீர்வு காணப்பட்டிருக்கவில்லை.

(ஊ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பிராந்திய ஊடகத்திலும் மற்றும் பாடசாலை பொதுசன ஊடகத்திலும் 13 செயலமர்வுகளை நடாத்துவதற்கு இலக்கிடப்பட்டு ரூபா 2,550,000 நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் 06 நிகழ்ச்சித் திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டு அதற்காக ரூபா 1,020,021 தொகை செலவிடப்பட்டிருந்தது.

### 4.2 *முகாமைத்துவ செயற்பாடுகள்:*

இலங்கை பத்திரிகைப் பேரவை மற்றும் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு தொடர்பான சமாந்தரமான கற்கை யொன்றிற்காக ஆராய்ச்சி அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்கான உடன்படிக்கையின் பிரகாரம் ஆரம்பக் கொடுப்பனவு ரூபா 200,000 தொகையொன்று களணி பல்கலைக்கழகத்தின் ஊடகத்துறைப் பிரிவிற்கு 2015 நவெம்பர் 24 ஆந் திகதியளவில் செலுத்தப்பட்டிருந்ததுடன் ஒட்டுமொத்த ஆராய்ச்சி அறிக்கையும் அக்கொடுப்பனவு செய்து ஒரு மாத காலத்திற்குள் பேரவைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் அந்த அறிக்கை பேரவைக்கு பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இக்கொடுப்பனவுகளுக்காக ஆராய்ச்சி நிதியக் கணக்கில் ரூபா 1,507,037 மீதி காணப்படும் போது மீண்டெழும் அரச மானியம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 4.3 *சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்:*

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன:-

(அ) பேரவைக்கு கணினியொன்றைக் கொள்வனவு செய்யும்போது நிறுவனத் தேவைகளுக்கு பொருத்தமான மாதிரி யொன்றைத் தெரிவு செய்யாமல் கூறுவிலைகள் கோரப்பட்டிருந்ததுடன் நிறுவனத் தேவைகளுடன் பொருந்தாததெனக் காண்பித்து ஆகக் குறைந்த விலையான ரூபா 79,000 கேள்வி கவனத்திற்கொள்ளப்படாமல் ரூபா 104,500 தொகையில் கணினியொன்றைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) பயன்படு ஆயுட்காலம் சரியான பிரகாரம் மதிப்பீடு செய்யப்படாமல் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட முச்சக்கர வண்டி 2014 ஆம் ஆண்டில் ரூபா 70,000 இற்கு மீள் கணிப்பீடு செய்யப்பட்டு 2015 சனவரி 01 இல் உள்ளவாறு கொண்டு செல்லும் பெறுமதி ரூபா 64,000 ஆகக் காணப்பட்டபோது, 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் புத்தகங்களிடமிருந்து அகற்றுவதற்கு நடிவக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின்போது முச்சக்கர வண்டியொன்றைக் கொள்வனவு செய்வதற்காக பஜாஜ் நிறுவனத்தால் ரூபா 510,850 கூறுவிலை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் ரூபா 610,000 இற்கு அந்த நிறுவனத்திலிருந்தே கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட விலையினை விட ரூபா 99,150 மேலதிகமாகச் செலுத்தப்பட்டமைக்கான காரணங்கள் கணக்காய்விற்கு விளக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 *பதவியணியினர் நிருவாகம்:*

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன:-

(அ) பத்திரிகைப் பேரவை அதிகாரச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் பிரகாரம், அதில் நிறைவேற்று உத்தியோகத்தரான பத்திரிகை ஆணையாளர் பதவியின் நடவடிக்கைகள் 2010, மார்ச் 31 ஆந் திகதி முதல் அமைச்சரவை ஆலோசனையின் பிரகாரம் அவ்வப்போது அமைச்சின் சிபாரிசின் அடிப்படையில் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரால் பதிற்கடமை அடிப்படையில் மேவுகை செய்யப்பட்டிருந்தது. முழு நேர உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட வேண்டிய இந்தப் பதவிக்காக நிரந்தரமாக நபரொருவரை நியமிப்பதற்கு 2012 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின்போது நடைபெற்ற பொது முயற்சிகள் செயற்குழுவிலும் கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் இவ்வறிக்கைத் திகதி வரையிலும் இப்பதவிக்காக நிரந்தர நபரொருவர் ஆட்சேர்க்கப்பட்டிருக்கவில்லை;

(ஆ) பேரவையில் 5 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டமையால் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை உறுதிப்படுத்துதல், செய்தி விமர்சனம், ஊழியர் நிர்வாகம் மற்றும் பத்திரிகை முறைப்பாடுகளை விசாரித்தல் போன்ற நடவடிக்கைகளை உரிய பிரகாரம் நிறைவேற்றுவதற்கு வசதியீனமாக இருந்ததுடன் 2013 ஆம் ஆண்டு முதல் நிதி ஏற்பாடு அங்கீகரிக் கப்பட்டிருக்கும்போது ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

5. *கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்:*

5.1 *செயல்நடவடிக்கைத் திட்டம்:*

மீளாய்வாண்டிற்காக பேரவையினால் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அது காலரீதியாக மீளாய்வு செய்யப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கையின்படி அதில் குறிப்பிடப்பட்ட இலக்குகளில் 50 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை நிறைவேற்றப்படாத 06 சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

5.2 *உள்ளகக் கணக்காய்வு:*

பேரவையின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று செயற்படுத்தப்படாதிருந்ததுடன் பேரவையின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்குக் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போதும் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

5.3 *கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு:*

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம், ஆகக் குறைந்தது காலாண்டிற்கு ஒன்று வீதம், 4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

5.4 *கொள்வனவுத் திட்டம்:*

2006, சனவரி 25 ஆந் திகதிய கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக அமைச்சின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

5.5 *பாதீட்டுக் கட்டுப்பாடு:*

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 26 சதவீதம் முதல் 70 சதவீதம் வரையான பொருண்மையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

5.6 *தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்:*

பேரவை தொடர்பாக 2014 யூலை 24 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் செயற்குழுக்கூட்டத்தின்போது வழங்கப்பட்ட கட்டளைகளான உள்ளகக் கணக்காய்வை அமுல்படுத்துதல், கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கை சமர்ப்பித்தல், முறையான பிரகாரம் கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துதல் மற்றும் பேரவையில் வெற்றிடமாகியுள்ள நிறைவேற்று பதவிகளுக்காக உத்தியோகத்தர்களை நியமித்தல் போன்ற பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

5.7 *சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்பு:*

1981 ஒற்றோபர் 14 ஆந் திகதிய 162/5 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் பிரகாரம் பத்திரிகை நிருபர்களுக்காக பண்பாட்டு விழுமியங்களின் பிரகாரம் தினந்தோறும் பிரசுரிக்கப்படுகின்ற பத்திரிகைகளை புலனாய்வு செய்து பார்ப்பதற்கான திட்டமொன்று காணப்பட்ட போதிலும் பிரசுரிக்கப்படுகின்ற பத்திரிகைகளின் அளவுகள் மற்றும் ஒப்பீடு செய்யும் புலனாய்வு உத்தியோகத்தர்களின் குறைவொன்று காணப்பட்டமையால் வரையறுக்கப்பட்ட அளவிலான புலனாய்வு அறிக்கைகள் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த புலனாய்வு அறிக்கை தொடர்பாகவும் விழுமியங்களை பின்பற்றுதல் தொடர்பாகவும் தேவையான மதிப்பீட்டைச் செய்வது தொடர்பில் பணிப்பாளர் சபை போதியளவான கவனம் செலுத்தியிருக்கவில்லை.

6. **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்:**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு நலிவுகள் அவ்வப்போது பேரவையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது:-

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) பதவியணியினர் நிர்வாகம் | பதவிநிலை உத்தியோகத்தர் பதவிகள் பதிற்கடமை அடிப்படையில் மேவுகை செய்யப்பட்டமையும் அத்தியவசிய பதவிகள் வெற்றிடமாகக் காணப்படுகின்றமையும். |
| (ஆ) கொள்வனவுக் கட்டுப்பாடு | மாதிரிகள் தீர்மானிக்கப்படாமலும் பொருளாதார சிக்கனத்தைக் கருதாமலும் கொள்வனவு செய்தல். |
| (இ) இருப்புக் கட்டுப்பாடு | இருப்புப் பதிவேடு பராமரிக்கப்படாமை. |
| (ஈ) உள்ளகக் கணக்காய்வு | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று செயற்படுத்தப்படாமை. |

எச். எம். காமினி விஜேசிங்ஹ,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.